# மட்/ புனித மிக்கேல் கல்லூரி

**இடர் விடுமுறைக்கால செயலட்டை – 2020**

**இந்து நாகரிகம்** **தரம் 13**

**தரம் 13 பாடத்திட்டத்தினை முழுமையாக உள்ளடக்கிய க.பொ.த உயர்தர இந்துநாகரிகம் 1 பரீட்சை பத்திரத்தை மாணவர்கள் இலகுவாக எதிர் கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்ட முன்னோடி அலகுப்பரீட்சைகளையும் விடைகளையும் உள்ளடக்கிய செயற்றிட்டம்.**

| தேர்ச்சி | தலைப்பு |
|---|---|
| 6.0 | இந்து தத்துவ சிந்தனை |
| 7.0 | இந்து அறம் |
| 8.0 | இந்துக்கல்வி பாரம்பரியம் |
| 9.0 | இந்து அறிவியல் |

ஆசிரியர் - திருமதி.இ.சந்திரலிங்கம்

# மட்/ புனித மிக்கேல் கல்லூரி

**இடர் விடுமுறைக்கால செயலட்டை – 2020**

## இந்து நாகரிகம் தரம் 13

தேர்ச்சி – 6.0
தலைப்பு - இந்து தத்துவ சிந்தனை

திருமதி.இ.சந்திரலிங்கம்

11.05.2020

### 1 தொடக்கம் 50 வரையான எல்லா வினாக்களுக்கும் சரியான விடையினை தெரிவு செய்க

1) பிரபஞ்ச நோக்குடையதும் இறை நெறியை இணைத்துக் கொண்டதும் ஞானவேட்கையினை வலியுறுத்துவதுமாக அமைவது?

1. வேதம் 2.பிரம்மசூத்திரம் 3.ஆகமம் 4.உபநிடதம் 5.தத்துவம்

2) உயர்பிரமம் ஒன்றே அதற்கப்பால் ஒன்றுமில்லை'' என குறிப்பிடும் உபநிடதம்?

1.ஈசான உபநிடதம் 2.சாந்தோக்கிய உபநிடதம் 3.பிரசின்ன உபநிடதம் 4.கேனஉபநிடதம் 5.தைத்திரிய உபநிடதம்

3) உபநிடத சிந்தனைகளை சுருங்கிய வடிவில் சூத்திரங்களாக வெளிப்படுத்திய நூல் எது?

1.பிரம்ம சூத்திரம் 2.பகவத்கீதை 3.வேதம் 4.தர்மசூத்திரம் 5.சைவசித்தாந்த சாத்திரங்கள்

4) பிரம்ம சூத்திரத்தினை வேதாந்த சூத்திரமாக அழைப்பதற்கு காரணமாக அமைந்த வேதாந்தம்?

1.அத்வைத வேதாந்தம் 2.உபய வேதாந்தம் 3.மத்துவ வேதாந்தம் 4.வேதாந்தம் 5.விசிட்டாத்வைதம்

5) வேதசாரம் என அழைக்கப்படுவது எது?

1.வேதாந்தம் 2.திருப்புகழ் 3.திருமந்திரம் 4.திருக்குறள் 5.தேவாரம்

6) தமிழாகம் என போற்றப்படுவது?

1.தேவாரம் 2.திருக்குறள் 3.பெரிய புராணம் 4.திருப்புகழ் 5.திருமந்திரம்

7) இருக்கு வேத பாடல்களில் மேலான தேவர் யார் என்ற வினாக்களுக்கு விடையாக அமைந்த தேவர் யார்?

1.பிரசாபதி 2.அக்கினி 3.வர்ணன் 4.இந்திரன் 5.உருத்திரன்

8) இறைவனுக்கும் பிரபஞ்ச படைப்பிற்கும் இடையிலான தொடர்பினை விளக்கும் சூத்திரங்களை கொண்டமைந்த தொகுதி?

1.புருச சூக்தம் நாகதீப சூக்தம் 2.யம சூக்தம் நாசதீய சூக்தம் 3.புருச சூக்தம் வர்ணசூக்தம் 4.புருஷ சூக்தம் நாசதீய சூக்தம் 5.நாசதீப சூக்தம் வர்ண சூக்தம்

9) முழுமுதற் கோட்பாட்டினையும் பிரபஞ்ச கோட்பாட்டினையும் அரசியல் சிந்தனைகளையும் இணைப்பதாக அமையும் கோட்பாடு எது?

1.வர்ண சூக்தம் 2.ஐய சூக்தம் 3.புருஷ சூக்தம் 4.நாக தீய சூக்தம் 5.ஐம சூக்தம்

10) இரணிய கர்ப்பம் என்னும் பொன் முட்டையில் இருந்தே உலகம் படைக்கப்பட்டது என கூறும் வேதம் எது?

1.இருக்கு 2.ஐரோதயம் 3.சாமம் 4.அதர்வனம் 5.யசுர்

11) யாகத்தின் மூலம் உலகு படைக்கப்பட்டதாக கூறும் சூத்கம் எது?

1.புருஷ சூக்தம் 2.அக்கினி சூத்திரம் 3.ஐம சூக்தம் 4.வர்ண சூக்தம் 5.யாக சூக்தம்

12) ஆறு கடல் மலை ஆகிய இயற்கை அம்சங்களை நிலை நிறுத்தும் சக்தியாக விளங்கிய கடவுள் யார்?

1.இந்திரன் 2.உருத்திரன் 3.சூரியன் 4.பிரஜாபதி 5.வருணன்

13) கன்மவினை மறுபிறப்பு பற்றி கூறும் சூக்தம் எது?

1.ரிதசூக்தம் 2.ஞானசூக்தம் 3.யம சூக்தம் 4.வர்ண சூக்தம் 5.புருஷகசூக்தம்

14) “நன்மைகளுடன் விண்ணுலகம் நோக்கிச் செல்வாயாக” என்னும் வேண்டுதல்களைக்கொண்டமைந்த வேதம் எது?

1.யசுர் 2.இருக்கு 3.சாமம் 4.அதர்வனம் 5. சங்கிதை

15) “பிரம ஞானத்தை உணர்த்தும் ஒரு ஆசிரியரின் அடியில் நெருங்கியிருந்து அம்மறைப்பொருளைச் சிரத்தையுடன் கேட்டல்” எனப் பொருள்படுவது ?'

1.பிரமம் 2.ஞானம் 3.பிரம்ம சூத்திரம் 4.உபநிடதம் 5.வேதாந்தம்

16) ஆன்மா தனித்துவமானது என்றும் உடல் வேறு ஆன்மா வேறு என்றும் கூறும் வேதம்?

1.இருக்கு 2யசுர் 3. சாமம் 4.அதர்வனம் 5.பிராமணம்

17) “எள்ளில் எண்ணெய் உள்ளடங்கி இருப்பது போலவும் தயிரில் நெய் போலவும் விறகில் தீ போலவும் பிரம தத்தவம் மறைந்தள்ளது” எனக்கூறும் உபநிடதம் எது?

1. கட உபநிடதம் 2.கேன உபநிடதம் 3.தைத்திரிய உபநிடதம் 4.சாந்தோக்கிய உபநிடதம் 5.சுவேதாஸ்வர உபநிடதம்

18) இரகசியங்கள் என அழைக்கப்பட்டவை?

1.வேதம் 2.இதிகாசம் 3.புராணம் 4.ஆகமம் 5.உபநிடதங்கள்

19) செய்யுள் நடையில் அமைந்த உபநிடதங்களில் ஒன்று?

1.சுவேதாஸ்வரம் 2.சாந்தோக்கியம் 3.கேனம் 4.பிருகதாரணியம் 5.தைத்திரியம்

20) கேரளத்தில் காலடி என்ற கிராமத்தில் பிறந்த வேதாந்தி?

1.மத்துவர் 2.வசிழிட்டர் 3.சங்கரர் 4.இராமானுஜர் 5.பாதராயணம்

21) ஆரியாசதகம் விவேக சூடாமணி ஆகிய நூல்களை எழுதியவர்?

1.மத்துவர் 2.துளசிதாசர் 3.இராமானுஜர் 4.சங்கர் 5.பாதராயணர்

22) ஒரு பொருள் இன்னொன்றாக மாறாமல் இருந்தபடியே மாறிவிட்டதாக தோன்றுவது?

1.பிரதி விம்ப வாதம் 2.பரிணாம வாதம் 3.விவர்த்த வாதம் 4.சற்காரிய வாதம் 5.அவச்சேத வாதம்

23) சொல்லால் விபரிக்க முடியாதது என்பதனால் மாயையை எவ்வாறு அழைப்பர்?

1.ஆவரணம் 2.விக்சேபம் 3.அவித்தை 4.அநிர்வசனீயம் 5.மாயா

24) யாதவப் பிரகாசரை குருவாக கொண்ட வேதாந்தி?

1.சங்கரர் 2.மத்துவர் 3.சம்பாயர் 4.இராமானுஜர் 5.பாதராயணர்

25) நம் மாழ்வாருடன் தொடர்புடைய வேதாந்தி?

1.பாதராயணர் 2.சரகர் 3.மத்துவர் 4.இராமானுஜர் 5.சங்கரர்

26) கிருஷ்ண பகவான் வேடுவ வடிவில் வந்து வழித்துணையான சம்பவத்துடன் தொடர்புடைய வோதாந்தி?

1.இராமானுஜர் 2.சங்கரர் 3.மத்துவர் 4.சுஸ்ருதர் 5.பாதராயணர்

27) தர்ம பூத ஞானம் பற்றி கூறிய வேதாந்தி?

1.இராமானுஜர் 2.மத்துவர் 3.சுஸ்ருதர் 4.சங்கரர் 5.பாதராயணர்

28) சர்வமூலம் என்ற நூல் தொகுதியினை எழுதியவர்?

1.இராமானுஜர் 2.சங்கரர் 3.மத்துவர் 4.சுஸ்ருதர் 5.கௌடில்யர்

29) ஆன்மாக்கள் முத்தியின்பம் பெறுவதற்கு உலகம் நிலைக்களனாக அமைகின்றது. எனக்கூறியவர் ?

1.சங்கரர் 2.சுஸ்ருதர் 3.மத்துவர் 4.இராமானுஜர் 5.சரகர்

30) தன்னை சைவ சித்தாந்த மார்கி என குறிப்பிட்ட மன்னன்?

1.மாமல்லன் 2.பரமேஸ்வரன் 3.ராஜசிம்மன் 4.குளக்கோட்டன் 5.மகேந்திர வர்மன்

31) சிவனை பிறவாயாக்கைப் பியோன் என குறிப்பிடும் நூல்?

1.சிலப்பதிகாரம் 2.திருமந்திரம் 3.மணிமேகலை 4.திருக்குறள் 5.தொல்காப்பியம்

32) “பதிபசுபாசம் எனப்பகர் மூன்றில்.........” என்ற பாடலை பாடியவர்?

1.திருவள்ளுவர் 2.மெய்கண்டார் 3.திருமூலர் 4.கொடைபாதர் 5.உமாபதி

33) மெய்கண்ட தேவரின் குரு யார்?

1.உமாபதி 2.பரஞ்சோதி 3.மறைஞான சம்மந்தர் 4.திருநந்தி தேவர்
5.சத்திய ஞானதரிசனர்

34) உண்மை விளக்கம் என்ற நூலை எழுதியவர்?

1.மன வாசகம் கடந்த தேவர் 2.மெய்கண்டார் 3.உமாபதி 4.மறைஞான சம்பந்தர்
5.அருணந்தி சிவாச்சாரியார்

35) இறைவனின் ஒன்பது பேதங்களுள் சக்தி பேதமாக அமைவது?

1.விந்து 2.மகேஸ்வரன் 3.நாதம் 4.சதாசிவம் 5.உருத்திரன்

36) தனு கரண புவன போகங்களுடன் தொடர்புடைய அவித்தை எது?

1.சகலாவித்தை 2.மாயாவித்தை 3.சுத்தாவித்தை 4.கேவலாவித்தை
5.ஞானாவித்தை

37) ஆன்மாக்களின் காரியா அவித்தைகளில் துரியம் எனப்படுவது?

1.கனவு 2.உயிர்படங்கல் 3.உறக்கம் 4.நனவு 5.பேருநக்கம்

38) கன்மமும் மாயையும் ஆன்மாவுடன் இடையிடையே வந்து சேர்வதனால் எப்பெயர் பெறுகின்றது?

1.மூலமலம் 2.மாயாமலம் 3.சகதுமலம் 4.இருள்மலம் 5.ஆகந்துக மலம்

39) எப்பொழுதும் துக்கப்படுவதல் என்ற பொருள் அமைந்த ஆணவமலத்தின் குணங்களில் ஒன்று?

1.விகற்பம் 2.குரோதம் 3.அஞர் 4.கற்பம் 5.நகை

40) கன்மத்தின் செயல்களில் பரநிந்தை எனப்படுவது?

1.முயலுநல் 2.பிறர்பழி கூறுதல் 3.ஓங்குதல் 4.செல்லுதல் 5.மேவுதல்

41) உணவு சமைத்தல், ஓவியம் வரைதல் போன்றவற்றை குறிக்கும் வினை?

1.தீவினை 2.பசுதீவினை 3.வெறுவினை 4.நல்வினை 5.பசுநல்வினை

42) விருப்பு வெறுப்பு இன்றி நல்வினை தீவினை இரண்டையும் சமமாக மதிக்கும் நிலையினை எவ்வாறு அழைப்பர்?

1.திரோதானம் 2.இருவினை ஒப்பு 3.பிரத்தியாகாரம் 4.பற்றற்ற வினை
5.மலபரிபாகம்

43) வேதாந்தம் தெளிவாம் சைவ சித்தாந்தம்” என குறிப்பிட்டவர்?

1.மெய்கண்டார் 2.மறைஞான சம்மந்தர் 3.திருமூலர் 4.அருணந்தி சிவாச்சாரியார்
5.உமாபதி

44) ஆன்மாவின் உண்மை நிலையினை “எனதுடலென்றலின் உளது...” என குறிப்பிடும் நூல்?

1.சிவ ஞான போதம் 2.கொடிக்கவி 3.சிவஞான சித்தியார் 4.நெஞ்சுவிடு தூது
5.திருவருட்பயன்

45) சைவ சித்தாந்த அறிவியல் ஆய்வின் சிறப்பினை “அளவை காண்டல் கருதுதல் உரையே” என குறிப்பிடும் நூல்?

1.சிவஞான சித்தியார் 2.வினா வெண்பா 3.திருவருட்பயன் 4.சிவஞான போதம்
5.உண்மை விளக்கம்

46) ஞான மார்க்கம் கூறும் தசகாரிய செய்பாட்டில் அடங்காத விடயம்?

1.தத்துவரூபம் 2.தத்துவ சுத்தி 3.தத்துவ தரிசனம் 4.ஆன்ம சுத்தி
5.தத்துவஞானம்

47) “இந்த சரீரம் எமக்கு கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்” என கூறியவர்?

1.மெய்கண்டார் 2.அருணந்தி 3.உமாபதி 4.நாவலர் 5.மறைஞான சம்பந்தர்

48) “அவனருள் பெறாது முத்தியடைந்தவரில்லை” என குறிப்பிடும் நூல்?

1.பெரியபுராணம் 2.கந்த புராணம் 3.தேவாரம் 4.திருமந்திரம் 5.திருக்குறள

49) அகப்பூசை மூலம் அருவுருவ திருமேனியை வழிபடுதலை குறிப்பது?

1.கிரியை 2.சரியை 3.யோகம் 4.ஞானம் 5.அறிவு

50) “தாடலைப் போல் கூடல்” என சைவ சித்தாந்த முத்தி பற்றி குறிப்பிடும் நூல்?

1.சிவஞான போதம் 2.சிவஞானசித்தியார் 3.திருவருட்பயன் 4.கொடிக்கவி
5.உண்மை விளக்கம்

# மட்/புனித மிக்கேல் கல்லூரி

**இடர் விடுமுறைக்கால செயலட்டை – 2020**

**இந்துநாகரிகம் I - விடைப்பத்திரம்       தரம் - 13**

தேர்ச்சி – 6.0
தலைப்பு - இந்து தத்துவ சிந்தனை

திருமதி.இ.சந்திரலிங்கம்

12.05.2020

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 5 | 11) 1 | 21) 4 | 31) 1 | 41) 3 |
| 2) 3 | 12) 5 | 22) 3 | 32) 5 | 42) 2 |
| 3) 1 | 13) 3 | 23) 4 | 33) 2 | 43) 3 |
| 4) 1 | 14) 2 | 24) 4 | 34) 1 | 44) 1 |
| 5) 5 | 15) 4 | 25) 4 | 35) 1 | 45) 1 |
| 6) 5 | 16) 1 | 26) 1 | 36) 1 | 46) 5 |
| 7) 1 | 17) 5 | 27) 1 | 37) 5 | 47) 4 |
| 8) 4 | 18) 5 | 28) 3 | 38) 5 | 48) 2 |
| 9) 1 | 19) 1 | 29) 3 | 39) 3 | 49) 3 |
| 10) 1 | 20) 3 | 30) 3 | 40) 2 | 50) 3 |

# மட்/ புனித மிக்கேல் கல்லூரி

**இடர் விடுமுறைக்கால செயலட்டை – 2020**

## இந்து நாகரிகம் தரம் 13

தேர்ச்சி – 7.0
தலைப்பு - இந்து அறம்

திருமதி.இ.சந்திரலிங்கம்

13.05.2020

## பகுதி 1

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக .**

1) ''உலகைத்தாங்குவதும் அதனை நிலை நிறுத்துவதும் ரிதமாகிய அறமே'' எனக் கூறிய நூல் ?

1.வேதம் 2.ஆகமம் 3.உபநிடதம் 4.பகவற்கீதை

2) ''நானும் அது நீயும் அது எல்லாம் ஒன்று'' என சம நோக்குடன் உயர் நிலையில் அறத்தைப் போதிப்பது ?

1.வேதம் 2.ஆகமம் 3.உபநிடதம் 4. பகவற்கீதை

3) ''அதிதி தேவோபவ'' என உபநிடதம் யாரைச் சிறப்பிக்கின்றது ?

1.குரு 2.விருந்தினர் 3.தந்தை 4.தாய்

4) ''யதோ தர்மஸ்ய ததோஜெய'' எனக்குறிப்பிடும் நூல் ?

1.வேதம் 2.ஆகமம் 3.உபநிடதம் 4.பகவற்கீதை

5) சங்கமருவிய கால அறம் பற்றிய நூல்களுள் குறிப்பிடத்தக்க நூல் எது?

1.சிலப்பதிகாரம் 2.மணிமேகலை 3.திருந்திரம் 4.தர்மசாத்திரம்

6) ''ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்........'' என அறம் பற்றிச்சிறப்பிக்கும் சைவ சித்தாந்த நூல் எது?

1.சிவஞானபோதம் 2.சிவஞான சித்தியார் 3.திருவருட்பயன் 4.கொடிக்கவி

7) ''தர்மத்தின் மூலம்'' எனஅழைக்கப்படம் நூல் எது ?

1.வேதம் 2.ஆகமம் 3.உபநிடதம் 4.பகவற்கீதை

8) ''யாதும் ஊரே யாவரும் கேளீர்.........'' எனகூறும் நூல் எது ?

1.திருக்குறள் 2.சிலப்பதிகாரம் 3.சங்க இலக்கியம் 4.பல்லவ கால இலக்கியம்

9) உலக நீதி நீதிவெண்பா ஆகிய நூல்கள் எழுந்த காலம் எது?

1.சங்க காலம் 2.சங்கமருவிய காலம் 3.பல்லவ காலம் 4.நாயக்க காலம்

10) ‘‘தர்மம் பற்றிய விதிகள் தெய்வீகமானவை........’’ எனக்கூறும் நூல் எது?

1. மனுஸ்மிருதி 2. விஸ்ணுஸமிருதி 3.நாரத ஸ்மிருதி 4.திருமந்திரம்

11) பிராமணன் வேதத்தைப் படிக்காமல் வேறு தொழில் செய்தால் அவன் சந்ததியோடு சூத்திரனாகி விடுகின்றான் எனக்கூறும் நூல் எது?

1.மனுஸ்மிருதி 2.விஸ்னுஸ்மிருதி 3.நாரதஸ்மிருதி 4.போதாயன ஸமிருதி

12) பஞ்ச யக்ஞங்கள் ஆற்றப்பட வேண்டிய ஆச்சிரம நிலை?

1.பிரமச்சரியம் 2கிருஹஸ்தம் 3.வானப்பிரசித்தம் 4.சந்நியாசம்

13) ‘‘மன்னன் தனது தவ வலிமையால் அரசபதவியை பெறுகினறான்’’ எனக்கூறும் ஸ்மிருதி?

1.மனுஸ்மிருதி 2.விஸ்னுஸ்மிருதி 3.நாரதஸ்மிருதி 4.போதாயன ஸ்மிருதி

14) ‘பரிஷத்’ எனும் நீதி பரிபாலனம் பற்றிக்கூறும் ஸ்மிருதி ?

1.மனுஸ்மிருதி 2.விஸ்னுஸ்மிருதி 3.நாரதஸ்மிருதி 4.போதாயன ஸ்மிருதி

15) பெண்களின் உரிமை தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் ஸ்மிருதி?

1.மனுஸ்மிருதி 2.விஸ்னுஸ்மிருதி 3.நாரதஸ்மிருதி 4.போதாயன ஸ்மிருதி

16) ‘‘நூல்முறை தெரிந்து சீலத்து ஒழுகு’’ எனக்கூறியவர்?

1.திருவள்ளுவர் 2.ஔவையார் 3.திருமூலர் 4.நக்கீரர்

17) ‘‘ செந்நாப்போதர் என சிறப்பிக்கப்பட்டவர்?

1.திருவள்ளுவர் 2.ஔவையார் 3.திருமூலர் 4.நக்கீரர்

18) ஒருவன் பொருளைத்தேடி பிறருடன் பகுத்துண்ணல் செய்யாதவனாகில் அவனுக்கு கோடி பொருள் உண்டாகினும் இல்லாததாகும் என வெளிப்படுத்தியவர் ?

1.திருவள்ளுவர் 2.ஔவையார் 3.திருமூலர் 4.நக்கீரர்

19) அதியமானிடமிருந்து நெல்லிக்கனி பெற்றவர் யார்?

1.திருவள்ளுவர் 2.ஔவையார் 3.திருமூலர் 4.நக்கீரர்

20) அதிசயக்கோவை எனும் நூலைப்பாடியவர் ?

1.திருவள்ளுவர் 2.ஔவையார் 3.திருமூலர் 4.நக்கீரர்

21) ஆத்திசூடி எனும் நூலை இயற்றியவர் யார்?

1.திருவள்ளுவர் 2.ஔவையார் 3.திருமூலர் 4.நக்கீரர்

22) தமிழ் நெடுங்கணக்கினை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்ட நூல்களில் ஒன்று?

1.கொன்றை வேந்தன் 2.திருக்குறள் 3.தர்மசாத்திரம் 4.ஆத்திசூடி

23) கல்வி என்பதனை மெய்பொருள் காண்பதறிவு என்றவர் ?

1.திருவள்ளுவர் 2.ஔவையார் 3.திருமூலர் 4.நக்கீரர்

24) ‘‘சத்தியத்தைப்பேசுங்கள் அறச்செயலை செய்யுங்கள் படித்ததை ஒதுக்கித்தள்ளிவிடாதீர்கள்’’ எனகூறிய உபநிடதம்?

1.கடம் 2.தைத்திர்யம் 3.முண்டகம் 4.கேனம்

25) இல்லறத்தில் இரந்துகொண்டே ஞானியாக விளங்கியவர்களில் ஒருவர் ?

1.திருவள்ளுவர் 2.இராமகிருஸ்னர் 3.விவேகானந்தர் 3.திரமூலர்

26) ‘‘சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல’’ என கூறும் நூல் எது?

1.புறநாநூறு 2.அகநாநூறு 3.பரிபாடல் 4.கலித்தொகை

27) ‘தனக்கு விதிக்கப்பட்ட கடமையைச்செய்யும் போது இறத்தலே நன்று’ கூறும் நூல்?

1.வேதம் 2. திருக்குறள் 3.பிரம்மசூத்திரம் 4.பகவற்கீதை

28) அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் என்ற பொருள்பட ‘‘ அறம் துஞ்சும் செங்கோல்’ எனகூறிய நூல் ?

1. சிலப்பதிகாரம் 2.மணிமேகலை 3.வளையாபதி 4.குண்டலசேி

29) ‘‘தருமமே ஒருவனுக்கு மரணத்தின் பின்னரும் தொடர்ந்து வரும் மிக நெருங்கிய நண்பன்’’ எனகூறும் நூல் ?

1.பிரம்ம புராணம் 2.பூர்வ மீமாம்சை 3.மனு ஸ்மிருதி 4.அர்த்த சாஸ்திரம்

30) ‘‘காதலர் இருவர் கருத்தொருமித்துஆதரவு பட்டதே இன்பம’’ எனகூறியவர்?

1.ஔவையார் 2.திருவள்ளுவர் 3.திருமூலர் 4.கௌடபாதர்

# மட்/புனித மிக்கேல் கல்லூரி

**இடர் விடுமுறைக்கால செயலட்டை – 2020**

**இந்துநாகரிகம் I - விடைப்பத்திரம் தரம் - 13**

தேர்ச்சி – 7.0
தலைப்பு - இந்து அறம்

திருமதி.இ.சந்திரலிங்கம்

14.05.2020

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 7) 1 | 13) 3 | 19) 2 | 25) 2 |
| 2) 3 | 8) 3 | 14) 1 | 20) 2 | 26) 1 |
| 3) 2 | 9) 4 | 15) 3 | 21) 2 | 27) 4 |
| 4) 4 | 10) 1 | 16) 2 | 22) 4 | 28) 1 |
| 5) 3 | 11) 1 | 17) 1 | 23) 1 | 29) 1 |
| 6) 2 | 12) 2 | 18) 1 | 24) 2 | 30) 1 |

# மட்/ புனித மிக்கேல் கல்லூரி

**இடர் விடுமுறைக்கால செயலட்டை – 2020**

## இந்து நாகரிகம் தரம் 13

தேர்ச்சி – 8.0
தலைப்பு - இந்து கல்விப்பாரம்பரியம்

திருமதி.இ.சந்திரலிங்கம்

18.05.2020

## பகுதி 1

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக .**

1) குருவின் இல்லம் நாடி சென்று கல்வி கற்றதனை விபரிக்கும் சூத்தம் எது?

1.பிரமச்சரிய சூத்தம் 2.முனி சூத்தம் 3.பிரம்ம சூத்தம் 4.வருண சூத்தம் 5.புருஷ சூத்தம்

2) குருகுல கல்வியின் உயர்நிலையை விளக்கும் நூல்?

1.வேதம் 2.ஆகமம் 3.உபநிடதம் 4.பிராமணம் 5.ஆரணியம்

3) புராண இதிகாச காலங்களில் கல்வி நிலையங்களாக சிறப்புப்பெற்றவை?

1.பாடசாலைகள் 2.ஆச்சிரமங்கள் 3.திண்ணைகள் 4.மடங்கள் 5.ஆலயங்கள்

4) மகாபாரதத்தில் கௌரவர்களும் பாண்டவர்களும் கல்வி கற்ற இடம்?

1.அரண்மனை 2.ஆச்சிரமங்கள் 3.திண்ணைகள் 4.மடங்கள் 5.ஆலயங்கள்

5) சமய நூல் கல்விக்கு சிறப்புப்பெற்ற கல்விச்சாலை எது?

1.வாரணாசி 2.காசி 3.நாலந்தா 4.பாடலிபுரம் 5.தட்சசீலம்

6) தட்சசீலத்துடன் தொடர்புடைய மருத்துவகலை வல்லுனர்?

1.ஆத்திரேயர் 2.தன்வந்திரி 3.சரகர் 4.சுஷ்டுதர் 5.குப்தர்

7) குப்தர் காலத்தில் சிறப்புப்பெற்ற கல்வி நிலையங்களுள் ஒன்று?

1.வாரணாசி 2.காசி 3.நாலந்தா 4.பாடலிபுரம் 5.தட்சசீலம்

8) கல்வியில் முக்கியத்துவம் பற்றி கூறும் சங்க இலக்கியம்?

1.புரநானூறு 2.கலித்தொகை 3.குறுந்தொகை 4.பதிற்றுபத்து 5.பரிபாடல்

9) சங்கமருவிய காலத்தில் கல்வியின் சிறப்பு பற்றி கூறும் நூல்களில் ஒன்று?

1.திருமந்திரம் 2.நற்றமிழ் 3.ஆசானக்கோவை 4.சிலப்பதிகாராம் 5.மணிமேகலை

10) கல்விக்கூடங்கள் 'கடிகை' என்ற பெயரால் சுட்டப்பட்ட காலம்?

1.சங்ககாலம் 2.பல்லவகாலம் 3.குப்தர்காலம் 4.சோழர்காலம் 5.நாயக்கர்காலம்

11) இந்துக்கல்வி மரபானது மடங்களும் ஆதினங்களுமாக அமைந்திருந்த காலம்?

1.சங்ககாலம் 2.பல்லவகாலம் 3.குப்தர்காலம் 4.சோழர்காலம் 5.நாயக்கர்காலம்

12) ஐரோப்பியகாலத்தில் இந்துக்கல்வி பாரம்பரியம் பேணப்பட்ட இடம்?

1.அரண்மனை 2.ஆச்சிரமங்கள் 3.திண்ணைகள் 4.மடங்கள் 5.ஆலயங்கள்

13) குருகுலக்கல்வியின் இலட்சியமாக கருதப்பட்டது?

1.வேதம் 2.அன்பு 3.ஒழுக்கம் 4.கருணை 5.வழிபாடு

14) குருகுலக்கல்வியை முடித்து குருதட்சணை வழங்கிய மாணவன் எவ்வாறு அழைக்கப்பட்டான்?

1.ஸ்நாகன் 2.நாகன் 3.வித்தி 4.பாகன் 5.பங்கயன்

15) "உண்மை பேசு", "தருமம் செய்" போன்ற அறிவுரைகள் காணப்படும் உபநிடதம்?

1.கேன உபநிடதம் 2.கடோ உபநிடதம் 3.தைத்திரிய உபநிடதம் 4.சாந்தோக்கிய உபநிடதம் 5.முண்டக உபநிடதம்

16)புராதன இந்துக்கல்வி முறையில் பரவித்யா , அமரவித்யா பற்றி கூறும் உபநிடதம்?

1.கேன உபநிடதம் 2.கடோ உபநிடதம் 3.தைத்திரிய உபநிடதம் 4.சாந்தோக்கிய உபநிடதம் 5.முண்டக உபநிடதம்

17)புராதன இந்துக்கல்வி மரபில் வேதவித்யா , பூதவித்யா , பிரம்மவித்யா பற்றி கூறும் உபநிடதம்?

1.கேன உபநிடதம் 2.கடோ உபநிடதம் 3.தைத்திரிய உபநிடதம் 4.சாந்தோக்கிய உபநிடதம் 5.முண்டக உபநிடதம்

18) குருகுல கல்வி முறையில் வில்வித்தை , குதிரை ஏற்றம் போன்ற கலைகளை பெற்றுக்கொண்ட சிறுவர்கள் யாவர்?

1.பிராமணர் 2.சத்திரியர் 3.வைசியர் 4.யைசியர் 5.சூத்திரர்

19) சோழர் காலப்பகுதியில் பண் இசை , நடன சிற்பக்கலைகள் சிறப்பாக பயிற்றப்பட்டதாக கூறப்படும் சான்று?

1.படிமங்கள் 2.தாயத்துக்கள் 3.கல்வெட்டுக்கள் 4.சிற்பங்கள் 5.நூல்கள்

20) 19ம் நூற்றாண்டில் சமய விழிப்புணர்வை ஏற்படுத்திய நிறுவனங்களில் ஒன்று?

1.பிரம்ம சமாஜம் 2.பாடசாலைகள் 3.ஆதீனங்கள் 4.அறநெறி பாடசாலைகள் 5.வித்யா விருத்தி சங்கம்

# மட்/புனித மிக்கேல் கல்லூரி

**இடர் விடுமுறைக்கால செயலட்டை – 2020**

**இந்துநாகரிகம் I - விடைப்பத்திரம்   தரம் - 13**

தேர்ச்சி – 8.0
தலைப்பு - இந்து கல்விப்பாரம்பரியம்

திருமதி.இ.சந்திரலிங்கம்

19.05.2020

| | | | |
|---|---|---|---|
| 1) 1 | 6) 3 | 11) 5 | 16) 5 |
| 2) 3 | 7) 3 | 12) 3 | 17) 4 |
| 3) 2 | 8) 1 | 13) 3 | 18) 2 |
| 4) 1 | 9) 3 | 14) 1 | 19) 3 |
| 5) 1 | 10) 2 | 15) 3 | 20) 1 |

# மட்/ புனித மிக்கேல் கல்லூரி

**இடர் விடுமுறைக்கால செயலட்டை – 2020**

## இந்து நாகரிகம் தரம் 13

தேர்ச்சி – 9.0
தலைப்பு - இந்து அறிவியல்(வானியல்,சோதிடம்,மருத்துவம்)

திருமதி.இ.சந்திரலிங்கம்

20.05.2020

## பகுதி 1

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1) நீள்வட்டப் பாதை பற்றிக் கூறும் வானியல் கோட்பாடு?

1. புளிச கோட்பாடு 2. பிதாமககோட்பாடு 3.சூரிய கோட்பாடு 4.சந்திர கோட்பாடு 5.தைவதகோட்பாடு

2) சூரிய கோட்பாடு உள்ளடக்கிய விடயம் எது?

1.நீள்வட்டப்பாதை 2.நிலஅசைவு 3.கிரகங்களின் அசைவு 4.சூரிய அசைவ 5.சந்திரகிரகணம்

3) வானத்தில் 27 நட்சத்திரங்கள் அல்லது சந்திர வீடுகள் உள்ளன எனக்கணக்கிடப்பட்ட காலம் எது?

1.வேதகாலம் 2.புராண இதிகாச காலம் 3.சங்க காலம் 4.பல்லவர் காலம் 5.சோழர் காலம்

4) “ மாசக்கிருத்தா” என அழைக்கப்பட்ட கிரகம் எது ?

1.சூரியன் 2.சந்திரன் 3.புதன் 4.வியாளன் 5.வெள்ளி

5) கி.பி. 5ம் நூற்றாணடளவில் புவியானது சூரியனைச்சுற்றி வருகின்றது எனவும் அது தன் அச்சில் சுழல்கின்றது எனவும் கருத்து வெளியிட்ட வானியலாளர் யார்?

1.எஸ்.பி.தீட்சித் 2.ஆரியப்பட்டர் 3.வராகமிகிரர் 4.பிரம்மகுப்தர் 5.தைவன்சர்

6) கி.பி.5ம் 7ம் நூற்றாணடளவில் வானியலாராச்சி மையம் இருந்ததாக கூறப்படும் இடம்

1.மதுரை 2.காஞ்சி 3.சென்னை 4.உஜ்ஜனி 5.ஒரிசா

7) ஆரியப்பட்டர் , வராகமிகிரர் , பிரம்மகுப்தர் ஆகிய மூவரும் எப்பெயரினால் சிறப்பிக்கப்பட்டனர்

1.திரிதாதர் 2.திரிதெய்வங்கள் 3.முப்பெரும்பிதாமகர்கள் 4.முப்பெரும் வானியலாளர்கள் 5.மூவாய்வாளர்

8) இந்திய வானியல் , கணிதவியல் சிறப்பினைப்போற்றிய சிரிய நாட்டு வானியலாளர்கள்

1.செவரசு,செபோத்து 2. செவ்வரசு,இமிலி 3.இமிலன், செபோத்து 4.இமிலன்,இமிலி 5.செவது,செபோத்து

9) புளிச சித்தாந்தம் என்ற வானியல் நூலைத்தொகுத்தவர் யார்?

1.ஆரியப்பட்டர் 2.புளிசர் 3.லாடதேவர் 4லாடர் 5.வராகமிகிரர்

10) பஞ்ச சித்தாந்திகை எனும் தொகுப்பு நாலை வெளியிட்டவர் யார் ?

1.ஆரியப்பட்டர் 2.புளிசர் 3.லாடதேவர் 4லாடர் 5.வராகமிகிரர்

11)இலங்கையில் சூரியஉதயத்தை அடிப்படையாகக்கொண்டு நேரத்தைக்கணிப்பிட்டவர் யார்?

1.சிம்வராசாரியார் 2.லாடதேவர் 3.தாசாரியார் 4.நயச்சியார் 5கம்சிகார்

12) ‘ஜ்யோதிஷம’ என்ற வடமொழிப்பெயர் குறிப்பிடுவது

1.வருணம் 2.ஆச்சிரமம் 3.வானியல் 4.சோதிடம் 5.மருத்துவம்

13) மகரிஷியாகிய கார்க பிருது மன்னனின்சோதிடராவார் எனக்கூறும் நூல் எது?

1.வேதம் 2.அகமம் 3.மகாபாரதம் 4.இராமாயணம் 5.சரசோதிமாலை

14) வராகமிகிரர் பிருஹத்சம்ஹிதை எனும் சோதிட நூலை .இயற்றுவதற்குஆதாரமாக அமைந்த நூல் எது?

1.கார்கி சம்ஹிதை 2.பஞ்ச சித்தாந்திகை 3.பிரம்மஸ்புடசித்தாந்தம் 4.வேதம் 5.சரசோதிமாலை

15) “சோதிடனை ஆதரிக்காத இளவரசன் அழிவைச் சந்திப்பான்” எனக்கூறியவர்

1.பகவான் கார்க 2.ஆரியப்பட்டர் 3.பிரம்மகுப்தர் 4.புளிசர் 5.வராகமிகிரர்

16) ‘பிருகத் சம்கிதை’ என்னும் சோதிட நூலை எழுதியவர் யார்?

1.பகவான் கார்க 2.ஆரியப்பட்டர் 3.பிரம்மகுப்தர் 4.புளிசர் 5.வராகமிகிரர்

17) பிருகத் ஜாதக, யோக யாத்ரா ஆகிய நூல்களை எழுதியவர் யார்?

1.பகவான் கார்க 2.ஆரியப்பட்டர் 3.பிரம்மகுப்தர் 4.புளிசர் 5.வராகமிகிரர்

18) பிற்கால சோதிட அறிஞர்கள் வரிசையில் ‘சாதக பாஸ்கரன்’ எனும் நூலை எழுதியவர்

1.முஞ்சல 2.சதானந்தர் 3.பாஸ்கர தேவர் 4.பாஸ்கராச்சாரியார் 5.பல்லாடர்

19) ‘ஞாயிறானது மேடராசி தொடங்கி இராசி தோறும் பெயர்ந்து செல்கின்றது’ எனக் குறிப்பிடும் சங்க இலக்கியம்

1.நெடுநல்வாடை 2. புறநானூறு 3. முல்லைப்பாட்டு 4. அகநானூறு 5.ஐங்குறுநூறு

20) கோள் நின்ற நிலை இநாண் மீன்கள் எழுவதும் அமர்வதும் இ எரிமீன் விழுவதும் ஆகியவற்றைக் குறிப்பிடும் சங்க இலக்கியம்

1.நெடுநல்வாடை 2. புறநானூறு 3. முல்லைப்பாட்டு 4. அகநானூறு 5.ஐங்குறுநூறு

21) ‘ கன்னல்’ என்னும் காலத்தை அளவிடும் கருவி பற்றி குறிப்பிடும் இலக்கியம் எது ?

1.நெடுநல்வாடை 2.புறநானூறு 3.முல்லைப்பாட்டு 4.அகநானூறு 5.ஐங்குறுநூறு

22) இருக்குமிடத்திலிருந்தே கோள்களைத் துல்லியமாக கணிக்கும் ஆற்றல் பெற்றவனை பழந்தமிழர் எவ்வாறு அழைத்தனர்?

1.பகலவன் 2.சாணக்கியன் 3.கணிகன் 4.கணக்கியன் 5.குன்றன்

23) செவ்வண்ணக்கோள் என அழைக்கப்பட்ட கோள் எது?

1.திங்கள் 2.செவ்வாய் 3.புதன் 4.வியாளன் 5.வெள்ளி

24) பொன் வண்ணக்கோள் என அழைக்கப்பட்ட கோள் எது ?

1.திங்கள் 2.செவ்வாய் 3.புதன் 4.வியாளன் 5.வெள்ளி

25) வெண்ணிறக்கோள் என அழைக்கப்பட்ட கோள் எது ?

1.திங்கள் 2.செவ்வாய் 3.புதன் 4.வியாளன் 5.வெள்ளி

26) ஈழத்தில் கி.பி 1310ல் அரச சபையில் அரங்கேற்றப்பட்ட சோதிட நூல் எது?

1.சரசோதிமாலை 2.பிரம்ம புராணம் 3. பிருஹத் ஜாதக 4.யோக ஜாத்திரா
5.சாதகபாஸ்கரா

27) ‘சரசோதிமாலையை’ எழுதியவர் யார் ?

1.இராமலிங்க முனிவர் 2.சோமசன்மா 3.இராசபண்டிதர் 4.யோகபண்டிதர்
5.போசராச பண்டிதர்

28) ‘செகராச சேகரமாலை’ எனும் சோதிட நூலை எழுதியவர்யார்?

1.இராமலிங்க முனிவர் 2.சோமசன்மா 3.இராசபண்டிதர் 4.யோகபண்டிதர்
5.போசராச பண்டிதர்

29) ‘சந்தான தீபிகை’ எனும் சோதிட நூலை எழுதியவர் ?

1.இராமலிங்க முனிவர் 2.சோமசன்மா 3.இராசபண்டிதர் 4.யோகபண்டிதர்
5.போசராச பண்டிதர்

30) ‘ஓஷதி சூக்தம்’ பற்றிக்கூறும் வேதம் எது ?

1.இருக்கு 2.யசுர் 3.சாமம் 4.அதர்வனம் 5.மாந்திரிகம்

31) சுக்கில யசுர் வேதத்தில் கூறப்படும் நோய்களில் ஒன்று ?

1.தடிமல் 2.இருமல் 3.தோல் நோய் 4.இதய நோய் 5.கண் நோய்

32) சூரியனின் அகச்சிவப்பு கதிர்களுக்கு மஞ்சள் காமாலை நோயை குணப்படுத்தும் சக்தி உண்டென கூறிய வேதம் எது?

1.இருக்கு 2.யசுர் 3.சாமம் 4.அதர்வனம் 5.மாந்திரிகம்

33) இந்திய மருத்துவத்தின் தந்தை எனக்கூறப்பட்டவர்?

1.ஆஸ்தியேர் 2.தன்வந்திரி 3.சரகர் 4.சுஸ்ருதர் 5.புளிசர்

34) 149 வகை நோய்கள் பற்றிக்கூறும் சரகசம்ஹிதையினை எழுதியவர் யார்?

1.ஆஸ்திரேயர் 2.தன்வந்திரி 3.சரகர் 4.சுஸ்ருதர் 5.வராகமிகிரர்

35) அறுவைச்சிகிச்சையின் தந்தை எனப் போற்றப்பட்டவர் யார்?

1.ஆஸ்திரேயர் 2.தன்வந்திரி 3.சரகர் 4.சுஸ்ருதர் 5.வராகமிகிரர்

36) “ அறுவைச்சிகிச்சைக்கு இறந்தவரின் உடலை அறுத்து ஒவ்வொரு உறுப்பையும் தெரிந்துகொள்ள வேண்டும்” எனக்கூறியவர்?

1.ஆஸ்திரேயர் 2.தன்வந்திரி 3.சரகர் 4.சுஸ்ருதர் 5.வராகமிகிரர்

37) அறுவைச்சிகிச்சை பற்றிக் கூறும் சங்க இலக்கியம் எது?

1. அகநானூறு 2.பரிபாடல் 3.பதிற்றுப்பத்து 4.திருக்குறள் 5.கலித்தொகை

38) “ நோய்நாடி நோய் முதல் நாடி............” என மருத்துவம் பற்றிக்கூறும் நூல் எது?

1.திருக்குறள் 2.வேதம் 3.ஆகமம் 4.பகவற்கீதை 5.திருமந்திரம்

39) பல்லவர் கால அரசர்கள் மருத்துவர்களுக்கு மானியமாக வழங்கிய நிலம் எப்பெயர் பெற்றது?

1.நிந்தகம் 2.தேவதானம் 3.தேவப்பேறு 4.மருத்துவப்பேறு 5.பல்லவப்பேறு

40) தனது தந்தை சுந்தர சோழனின் நினைவாக தஞ்சையில் ஒரு மருந்தகத்தை அமைத்தவர் யார் ?

1.இராஜஇராஜ சோழன் 2.இராஜேந்திர சோழன் 3.குலோத்துங்க சோழன்
4.மங்கயற்கரசியார் 5.குந்தவைப்பிராட்டியார்

# மட்/புனித மிக்கேல் கல்லூரி

**இடர் விடுமுறைக்கால செயலட்டை – 2020**

**இந்துநாகரிகம் I - விடைப்பத்திரம் தரம் - 13**

தேர்ச்சி – 9.0
தலைப்பு - இந்து அறிவியல்(வானியல்,சோதிடம்,மருத்துவம்)

திருமதி.இ.சந்திரலிங்கம்

21.05.2020

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 9) 2 | 17) 2 | 25) 5 | 33) 2 |
| 2) 3 | 10) 5 | 18) 4 | 26) 1 | 34) 3 |
| 3) 1 | 11) 1 | 19) 1 | 27) 5 | 35) 4 |
| 4) 2 | 12) 4 | 20) 2 | 28) 2 | 36) 4 |
| 5) 2 | 13) 3 | 21) 3 | 29) 1 | 37) 3 |
| 6) 4 | 14) 1 | 22) 3 | 30) 1 | 38) 1 |
| 7) 3 | 15) 1 | 23) 2 | 31) 4 | 39) 4 |
| 8) 1 | 16) 5 | 24) 4 | 32) 4 | 40) 5 |